

அரியலூர் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் இல்லத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் BLA 2 ,BLC ஆகியோரின் பணிகள் குறித்து மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் உரையாற்றினார். உடன் குன்னம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் ஏ.கே. அருண், அரியலூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் ப.அன்பரசு மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




### முதுபெரும் எழுத்தாளர் கொ.மா.கோதண்டம் மறைவு:

# இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.7-

**“முதுபெரும் எழுத்தாளர் கொ.மா. கோதண்டம் மறைவு இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முதுபெரும் எழுத்தாளர் குறிஞ்சிச் செல்வர் கொ.மா. கோதண்டம் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

எளிய குடும்பத்தில் பிறந்து பஞ்சாலைத் தொழிலாளராக தமது வாழ்வைத் தொடங்கிய திரு. கோதண்டம் அவர்கள், அதே எளிய மக்களுக்கான எழுத்தின் மூலமாக இலக்கிய உலகில் தடம்பதித்த மிகச்சிறந்த படைப்பாளி. அதுமட்டுமின்றி சிறார்களுக்கான இலக்கியப் படைப்புகளிலும் பெரும் பங்களிப்பைச் செய்து, இன்றைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

பால சாகித்திய விருது, குடியரசுத் தலைவர் விருது, தமிழ்நாடு அரசின் இலக்கிய மாமணி விருது எனப் பல்வேறு சிறப்புகளைப் பெற்ற இவரது நூல்கள், கடந்த 2025 ஏப்ரல் 5 அன்று நமது திராவிட மாடல் அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டன என்பதையும் நினைவு கூர்கிறேன்.

இத்தனை சிறப்புகள் வாய்ந்த எழுத்தாளர் கொ.மா. கோதண்டம் அவர்களின் மறைவு கலை, இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், சக எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை!



கோவை, அக்.7 -

கோவை மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்களுக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் செந்தமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : -

கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் இன்று (7.10.2025 செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணியளவில் வட கோவை குறுக்குவெட்டு சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்ட அவைத்தலைவர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கோவை மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், பகுதி கழக பொறுப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று தங்களை கேட்டு கொள்கிறேன்.

பொருள் : 1. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் கோவை வருகை குறித்து, 2. கழக ஆக்க பணிகள் குறித்து,

இவ்வாறு கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன் தெரிவித்துள்ளார்.

# நாமக்கல் கிழக்கு மாவட்டப் பொறியாளர் அணி அறிமுகக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., பங்கேற்பு!

நாமக்கல், அக்.7-


நாமக்கல் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி அறிமுகக் கூட்டம் நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கத்தில் நடை பெற்றது.

இக்கூட்டத்திற்கு நாமக்கல் தெற்கு நகர் செயலாளர் ராணா ஆனந்த், கிழக்கு நகர செயலாளரும், நாமக்கல் மாநகராட்சி துணை மேருமான செ.பூபதி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி, மோகனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெ. நவலடி,

நாமக்கல் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் பா.கிருபாகரன், துணை அமைப்பாளர்கள் எல்.திருஞானமூர்த்தி, உதயகுமார், இனியன், நேரு முன்னிலை வகித்தனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில் புதிதாக நியமிக்கப் பட்டுள்ள ஒன்றிய, நகர, பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அறிந்து நீங்கள் உணர்ந்து கொண்டு இயக்கத்தில் தங்களை ஒப்படைத்துக் கொண்டு உணர்வு பூர்வமாக பணியாற்ற வேண்டும். வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளையும் அந்தந்த ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்களுடன் இணைந்து வென்றெடுக்கும் வகையில் ஒவ்வொருவரும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பொன்.சித்தார்த், புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, மடத்துக்குளம் கிழக்கு ஒன்றியம், சோழமாதேவி ஊராட்சியில் மடத்துக்குளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சாகுல் அமீது ஏற்பாட்டில் 15க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், ஒன்றிய அவைத்தலைவர் இளங்கோவன், துணை செயலாளர் சிவக்குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பி.எஸ்.தங்கராஜ், கடத்தூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் கலையரசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.2.33 கோடி மதிப்பீட்டில் 9 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், அக்.7-

அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு ஊராட்சிகளில் ரூ.2.33 கோடி மதிப்பீட்டில் 9 புதிய வளர்ச்சித்திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டா லின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலைகளை மேம்படுத்துதல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல், பள்ளி வகுப்பறைகள் கட்டுதல், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், போர்வெல் மற்றும் சிமெண்ட் தொட்டி அமைத்தல், கதிரடிக்கும் களம் அமைத்தல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், ஏரிகள் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் ரூ.2.33 கோடி மதிப்பீட்டில் 09 புதிய வளர்ச்சித்திட்டப் பணிகளை துவக்கி வைத்தார்.

அதன்படி செந்துறை ஊராட்சி ஒன்றியம், குழுமூர் ஊராட்சியில் ரூ.13.09 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், பின்னர் சன்னாசிநல்லூர் ஊராட்சி, அருந்ததியர் தெருவில் ரூ.7.39 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், அதனைத்தொடர்ந்து தளவாய் ஊராட்சி வடக்குத் தெருவில் ரூ.10.47 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், பின்னர் செங்கமேடு கிராமத்தில் ரூ.7.21 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பலப்படுத்தும் பணியையும், அதனைத் தொடர்ந்து சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.35.25 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டும் பணியையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து பணிகளை உரிய காலத்திற்குள் தரமாகவும், விரைவாகவும் முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, ஆலத்தியூர் ஊராட்சி, புதிய ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதிகளில் ரூ.8.94 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், பின்னர் ஆதனக்குறிச்சி ஊராட்சி, அருந்ததியர் தெருவில் ரூ.2.20 இலட்சம் மதிப்பீட்டில் போர்வெல் மின் மோட்டாருக்கு சிமெண்ட் தொட்டி அமைக்கும் பணியையும், அதனைத்தொடர்;ந்து மருங்கூர் ஊராட்சியில் ரூ.8.75 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து மருங்கூர் ஊராட்சியில் ரூ.139.91 இலட்சம் மதிப்பீட்டில் துளார் முதல் மருங்கூர் வரை சாலை பலப்படுத்தும் பணிகள் என மொத்தம் ரூ.233.21 இலட்சம் மதிப்பீட்டில் 9 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு விரைவாக முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, செந்துறை வட்டாட்சியர் வேலுமணி, வட்டார வளர்ச்சி அலுவலர் முருகன், ஒன்றிய பொறுப்பாளர்கள் பொன்.செல்வம், வி.எழில் மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### வண்டலூர் – அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் – இரவு தங்குமிடம் திரும்பாத

# ‘ஷெரியார்’ - 5 வயது சிங்கம் தொடர்ந்து கண்காணிப்பு!

## சஃபாரி பகுதிக்குள் சிங்கத்தின் இருப்பை உறுதிப்படுத்திய வனத்துறை!

வண்டலூர், அக்.7-

வண்டலூர் - அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் இயக்குநர் அறிக்கை வருமாறு:-

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர், சென்னை வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், ஒன்பது சிங்கங்கள் உள்ளன, அவற்றில் ஏழு (மூன்று ஆண் மற்றும் நான்கு பெண்) லயன் சஃபாரியில் பராமரிக்கப்படுகின்றன, இது பார்வையாளர்களுக்கு கிட்டத்தட்ட இயற்கையான அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றில், ஜோடி சிங்கங்கள் சங்கர் மற்றும் ஜெயா சமீப காலம் வரை திறந்த வெளி சஃபாரி பகுதிக்கு வழக்கமாக விடப்பட்டன.

2023-ஆம் ஆண்டு பெங்களூரு, பன்னேர்கட்டா உயிரியல் பூங்காவுடன் விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் மூலம் AAZP க்கு கொண்டு வரப்பட்ட ஷெரியார் (5 வயது) என்ற இளம் ஆண் சிங்கமும் சஃபாரி பகுதிக்குள் தொடர்ந்து விடப்படுகிறது. இருப்பினும், அக்டோபர் 3, 2025 அன்று, சிங்கம் இரவு தங்குமிடத்திற்குத் திரும்ப வில்லை, இது சிங்கம் தற்போது சுற்றுச்சூழலை ஆராய்ந்து வருவதைக் குறிக்கிறது, இது ஒரு இளம் சிங்கத்திற்கு இயல்பானது மற்றும் எதிர்பார்க்கப்படும் நடத்தை. விலங்கின் அசைவுகள் உயிரியல் பூங்கா ஊழியர்களால் தொடர்ந்து கண்காணிக்கப் படுகின்றன.

சுமார் 20 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள சிங்க சஃபாரி பகுதிக்குள் சிங்கத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக, ஐந்து பிரத்யேகக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. முழு சஃபாரி பகுதியும் எல்லைச் சுவர் மற்றும் சங்கிலிஇணைப்பு வேலி மூலம் பாதுகாக்கப் பட்டு, விலங்கு பாதுகாக்கப் பட்ட பகுதிக்குள் இருப்பதை உறுதி செய்கிறது.

மேலும், பகலில் சாதாரண ட்ரோன்கள் மற்றும் இரவில் வெப்ப இமேஜிங் ட்ரோன் மூலம் சிங்கத்தின் பாதுகாப்பிற்காக இந்தப் பகுதி கண்காணிக்கப்படுகிறது. அதோடு, சிங்கத்தின் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக பத்து கேமரா பொறிகளும் நிறுவப் பட்டுள்ளன.

நடந்துகொண்டிருக்கும் கண்காணிப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின் போது, மீட்புக் குழுக்கள் சிங்கத்தைக் கண்டுள்ளன, மேலும் கள ஊழியர்களால் கால் தடங்கள் கவனிக்கப் பட்டுள்ளன, இது சஃபாரி பகுதிக்குள் சிங்கத்தின் இருப்பை உறுதிப்படுத்துகிறது.

இதுபோன்ற நிகழ்வுகள் கடந்த காலங்களிலும் நடந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இளம் சிங்கங்கள், இயற்கையாகவே, புதிதாக அறிமுகப்படுத்தப்படும்போது அலைந்து திரிந்து தங்கள் சுற்றுப்புறங்களை ஆராயும். முந்தைய நிகழ்வுகளில், அத்தகைய சிங்கங்கள் இரண்டு முதல் மூன்று நாட்களுக்குள் தங்கள் இரவு தங்குமிடங்களுக்கு பாதுகாப்பாகத் திரும்பியுள்ளன.

சிங்கத்தின் தொடர்ச்சியான ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக, சஃபாரி பகுதிக்குள் உணவு மற்றும் தண்ணீருக்கு AAZP நிர்வாகம் போதுமான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. சிங்கத்தின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி, ஆனைமலை மேற்கு ஒன்றியம், காளியாபுரம் ஊராட்சியில் ரூபாய் 1 கோடியே 45 லட்சத்து 13 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணியினை கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் தேவசேனாதிபதி, யுவராஜ், கோட்டூர் பேரூர் கழக செயலாளர் பால்ராஜ், பேரூராட்சி தலைவர் ராமகிருஷ்ணன் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.